| H.M.O.P.No. 112/2023 | PW1 : திரு. சித்ரா<br>க/பெ. திரு. அருள்தரும்ஜோதி | 06-08-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>கூடுதல் முதல் விசாரணையின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. திருமணத்தின்போது எனக்கு 10 சவரனும், எதிர்மனுதாரருக்கு 5 சவரனும் எனது பெற்றோர்கள் போட்டனர் என்றால் சரிதான், சில்லரை நகைகள் இல்லாமல் மேற்படி நகைகள் போட்டனர். தனிக்குடித்தனம் வைத்தபோது 3 சவரன் நகையை நான் விற்று நாங்கள் குடியிருந்த வீட்டினை சரிசெய்துகொண்டோம் என்றால் இல்லை. எனக்க ரமேஷ் என்கின்ற நபருடன் தவறான உறவு இருந்ததால் அதனால் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்ததால் நான் என் வீட்டிலிருந்த நகைகளை நான் போட்டுக்கொண்டு என் பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு ஆதாரமாக என் மாமியார் என் தந்தையிடம் பேசிய ஆடியோ உள்ளது என்றாலும், அதனை எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியத்தின்பேரில் தாக்கல் செய்ய தயாராக உள்ளார் என்றாலும் சரியல்ல.

2. திருமணத்திற்கு சீர்வரிசைக்காக ரூ2,00,000/- கொடுத்த பணத்தில் ரூ.2,00,000/- மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களை எதிர்மனுதாரர் வீட்டினர் வாங்கினார்கள் என்றாலும், அந்த பொருட்கள் எதிர்மனுதாரர் வசம்தான் உள்ளது என்றாலும், அதனை எதிர்மனுதாரர் என்வசம் திருப்பி கொடுக்க தயாராக உள்ளார்கள் என்றாலும் சரியல்ல. நான் நீதிமன்றத்தை சுத்தமான கரங்களுடன் அனுகாததால் என் மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.06 13:23:11 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**